**நெடுந்தீவு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 18 மே 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நெடுந்தீவு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கூட்டுமொத்தம் ரூபா 3,835,000 பெறுமதியான 04 வகையான கட்டட புனரமைப்பு வேலைகள் மூலதனமாக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கட்டடங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதி ஒழுங்கு விதி 371 | 156,215 | சபையின் முன்னைய தவிசாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த நிமித்த முற்பணங்கள் கடந்த 17 ஆண்டுகளாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதி ஒழுங்கு விதி 571 | 547,672 | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் | | |
| (i) | 26 ஜுன் 2008 இன் 13/2008 ஆம் இலக்கம். | | மாதத்திற்கான நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் வாகனங்களிற்கு ஒரு வருட காலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் | | |
| | 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம். | | பணத்தை அல்லது களஞ்சியப் பொருட்களை பெறுவதற்கு அல்லது அவற்றை கட்டுக்காப்பில் வைப்பதற்கு நிர்வாக ரீதியாகப் பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 2,252,348 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 5,505,060 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 80,000 | – | 47,750 | – | 103,000 | – | 95,800 | – |
| வாடகைகள் | 884,800 | – | 1,441,720 | 152,050 | 1,028,200 | – | 855,300 | 77,700 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 83,500 | – | 620,210 | 7,190 | 22,000 | – | 77,150 | 7,190 |
| ஏனைய வருமானம் | 1,582,250 | – | 3,134,986 | 2,755,190 | 1,575,300 | – | 2,236,641 | 2,683,290 |
| | 2,630,550 | – | 5,244,666 | 2,914,430 | 2,728,500 | – | 3,264,891 | 2,768,180 |

### 2.2.2 வீதவரிகள்

**தண்ணீர் வரி**

குடிநீர் விநியோகிக்கப்படும் மாதத்திலேயே நீர் விநியோக வரி அறவிடப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் நிலுவையாக ரூபா 47,040 அவதானிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடை வாடகை நிலுவை மற்றும் வியாபார குத்தகை நிலுவை என்பன முறையே ரூபா 82,550 மற்றும் ரூபா 152,599 அறவிடப்பட்டிருக்க கடந்த 02 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகையடிப்படையில் வழங்கப்பட்ட வாகனங்களின் வாடகை நிலுவை ரூபா 15,500 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய வருமானம்**

தெரு உருளை சேவை மற்றும் நீர் விநியோக சேவைகளுக்கான முன்சேவைக் கட்டண நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 517,400 அறவிடப்பட்டிருக்க கடந்த 02 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 15,487 தொகையான முத்திரைக்கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்படவேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

**திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொசுக்கள் நுளம்புகள் பரவுவதான தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

சபைக்குரித்தான 06 மயானங்களில் உடலை தகனம் செய்வதற்கான அனுமதி பெறப்பட்டு தகனம் செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கான மயான வரியும் அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் ஆதனங்கள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் வீதவரியும் அறவிடப்பட்டிருக்க கடந்த 05 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நெடுந்தீவுக்கான கடல் வழிப் பிரயாணத்துக்கென ஈடுபடுத்தப்பட்டிருக்கும் நெடுந்தாரகை படகு சேவைக்கான படகோட்டி சம்பளம் மற்றும் எரிபொருள் என்பவற்றிற்காக கூட்டுமொத்தம் ரூபா 1,846,295 சபை நிதியிலிருந்து மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்டிருந்தும் பிரயாணிகளிடமிருந்தான பிரயாணக் கட்டண அறவீடானது அச் செலவினை ஈடுசெய்வதற்கேற்ப இருக்காமையால் சபையானது நிதி நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை அவதானிக்கப்பட்டது.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 11 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சேவையிலிருந்து இளைப்பாற்றப்பட்ட அலுவலரொருவரின் பதவியினர் கடன்நிலுவை ரூபா 11,630 கடந்த 03 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையளிக்கப்படாதசொத்துக்கள்**

சபையின் பயன்பாட்டில் உள்ள 06 வாகனங்கள் சபைக்கு உரித்தற்ற நிலையில் கடந்த 03 தொடக்கம் 18 ஆண்டுகளாக சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

**3.5.2 குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

தண்ணீர் விநியோகிக்கும் பௌசரொன்று கடந்த 05 ஆண்டுகளாக சபையில் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2018 இற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் 18 மே 2018 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் காலதாமதம் அவதானிக்கப்பட்டது.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 32,250 தொடக்கம் ரூபா 1,286,560 அல்லது 40 சதவீதம் தொடக்கம் 102 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 3,000 தொடக்கம் ரூபா 3,817,910 அல்லது 24 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| கணக்கீடு | இழப்புப் பதிவேடு, தெரு விளக்கு பதிவேடு, அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப்பதிவேடு, ஊழியர் பிணைப்பண பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |